இந்த நாட்டின் பன்முகத் தன்மையில் நம்பிக்கை கொண்டுள்ளோம்!

# இந்தியை நம் தொண்டையில் திணிப்பதை உடனே திரும்பப் பெறுக!

'நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்' நிறுவனத்தின் சுற்றறிக்கையைக் கண்டித்து - முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, ஜூன்.13-

**இந்தியை நம் தொண்டையில் திணிப்பதை ஒன்றிய அரசு உடனே திரும்பப் பெற வேண்டும் என்றும் எமது மண்ணில் தமிழுக்குப் பதிலாக இந்தியைத் திணிக்கும் முயற்சியை எதிர்ப்போம் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டார்.**

*இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:*

இந்தியாவின் அனைத்துக் குடிமக்களும் நாட்டின் வளர்ச்சிக்குப் பங்களித்துவரும் நிலையில், ஒன்றிய அரசும் அதன் நிறுவனங்களும் பிற இந்திய மொழிகளைவிட இந்திக்கு அனைத்து வழிகளிலும் தேவையற்ற மற்றும் நியாயமற்ற ஆதரவைத் தொடர்ந்து வழங்குகின்றன. மேலும், மக்கள் நலனுக்காக அல்லாமல், இந்தியை நம் தொண்டையில் திணிக்கவே அவர்கள் தங்கள் மதிப்புமிக்க வளங்களைச் செலவிட விரும்புகிறார்கள்.

இவ்வகையில் சமீபத்தில் நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள சுற்றறிக்கை அநீதியானது. இதை உடனடியாக திரும்பப் பெற வேண்டும். நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் தலைவர் நீர்ஜா கபூர் இந்தி பேசாத மக்களையும் மற்றும் இந்தி பேசாத ஊழியர்களையும் அவமதித்ததற்காக மன்னிப்பு கேட்க வேண்டும்.

இந்தியாவில் இந்தி பேசாத குடிமக்கள் தங்கள் கடின உழைப்பாலும் திறமையாலும் நாட்டின் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வதில் தங்களின் பங்களிப்புகளை அளிக்கும்போதிலும், அவர்கள் இரண்டாம் தரக் குடிமக்களாக நடத்தப்படுவதைச் சகித்துக் கொள்ளும் காலம் மலையேறிவிட்டது.

இந்தித் திணிப்பைத் தடுத்து நிறுத்த தமிழ்நாடும், தி.மு.க.வும் எங்களால் இயன்ற அனைத்தையும் செய்வோம். ஒன்றிய அரசில் ரயில்வே, அஞ்சல் துறை, வங்கி, நாடாளுமன்றம் என அனைத்து இடங்களிலும் எம்மையும், எமது மக்களையும் அன்றாடம் பாதிக்கும் வகையில் இந்திக்கு வழங்கப்படும் அவசியமற்ற சிறப்பு நிலையை நீக்குவோம்.

நாங்கள் எங்கள் வரிகளை செலுத்துகிறோம், முன்னேற்றத்திற்குப் பங்களிக்கிறோம், எங்கள் வளமான மரபு மற்றும் இந்த நாட்டின் பன்முகத் தன்மையில் நம்பிக்கை கொண்டுள்ளோம். எங்கள் மொழிகள் சமமாக நடத்தப்பட வேண்டும். எமது மண்ணில் தமிழுக்குப் பதிலாக இந்தியைத் திணிக்கும் எந்த முயற்சியையும் எதிர்ப்போம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில்

# தமிழ்நாடு ஆளுநரைக் கண்டித்து 16ஆம் தேதி கண்டன ஆர்ப்பாட்டம்!

## சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. - நிரூபன் சக்கரவர்த்தி அறிவிப்பு!

சென்னை, ஜூன் 13-

தமிழ்நாட்டு மாணவர்களின் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பை சீர்குலைக்கும் வகையில் பட்டமளிக்கும் கடமையைச் செய்யாமல் தவிர்த்து காலதாமதப்படுத்தி வருதல், தமிழ்நாடு அரசின் பல்கலைக் கழகங்களில் துணை வேந்தர்களை நியமிப்பதில், அரசியலமைப்புச் சட்டவிதிகளுக்கு மாறாக செயல்பட்டு, ஒன்றிய அரசின் தலையீட்டை வலிந்து திணிக்க விரும்பி, துணை வேந்தர்களை நியமிக்காமல் தமிழ்நாடு பல்கலைக்கழகங்களில் செயலற்ற தன்மையை உருவாக்குதல், மேற்காணும் முக்கிய காரணங்களை முன்பே சிந்தித்து, தமிழ்நாடு பல்கலைக்கழகத் துணை வேந்தர்களை மாநில அரசே நியமிக்கும் வகையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் கொண்டுவரப்பட்ட சட்டமுன்வடிவு களுக்கு ஒப்புதல் வழங்காமல் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி அவர்கள் கிடப்பில் போட்டிருத்தல் ஆகியவற்றைக் கண்டித்து,

மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு (Federation of Students Organisation - Tamil Nadu) சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் வருகிற 16ஆம் தேதி ஆளுநர் மாளிகை அருகில் சின்னமலை சந்திப்பில் நடைபெறும் என ஒருங்கிணைப்பாளர்கள் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. இந்திய மாணவர் சங்க மாநிலச் செயலாளர் நிரூபன் சக்கரவர்த்தி ஆகியோர் அறிவிப்பு வெளியிட்டுள்ளனர்.

இதுகுறித்து அவர்களது அறிவிப்பு வருமாறு:-

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்களிலும் பட்டமளிப்பு விழாக்கள் நடைபெறும் போது, தமிழ்நாட்டில் உள்ள அறிஞர்கள், கல்வியாளர்கள் மற்றும் முன்னாள் துணைவேந்தர்கள் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டு கலந்து கொள்வர். ஆனால், தமிழ்நாட்டு பா.ஜ.க.வின் சிறப்புத் தலைவர் போல செயல்பட்டு வரும் ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள், பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவிற்கு தமிழ்நாட்டிலுள்ள அறிஞர்களைத் தவிர்த்து, வட இந்திய சனாதன சித்தாந்த வாதிகளை அழைத்து பட்டமளிப்பு விழா நடத்திவிட வேண்டுமென்று விருப்பம் கொண்டுள்ளார். இதனால், தமிழ்நாட்டில் அண்ணா பல்கலைக்கழகம் தவிர மற்ற 12 பல்கலைக் கழகங்களில் பட்டமளிப்பு விழாக்கள் நடைபெறாமல் 9,29,142 மாணவர்களுக்கு பட்டப்படிப்பு சான்றிதழ்களை வழங்காமல் தனது சட்டப்பூர்வமான கடமையை செய்யத் தவறியுள்ளார் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி (சிறப்புத் தலைவர், தமிழ்நாடு பா.ஜ.க.) அவர்கள்.

தமிழ்நாடு ஆளுநராக ஆர்.என். ரவி (சிறப்புத் தலைவர், தமிழ்நாடு பா.ஜ.க.) அவர்கள் பொறுப்பேற்ற நாளிலிருந்து அவரது அலட்சியம் மற்றும் சனாதனப் போக்கினால், இதுநாள் வரையிலும் பல்கலைக் கழகங்களில் தேர்ச்சிப்பெற்ற மாணவர்களுக்கு பட்டப்படிப்பு சான்றிதழ் வழங்க முடியவில்லை. பட்டப்படிப்பு சான்றிதழ் பெற முடியாததால், உயர்கல்வி பயிலவும் மற்றும் வேலை வாய்ப்பு பெற முடியாமலும், ஆராய்ச்சி மேற்படிப்பு பயிலவும் முடியாமல் மாணவர்கள் பெரு மளவு பாதிப்புக்குள்ளாகி உள்ளனர். மேலும், முனைவர் பட்டத்தை பெற்றவர்கள், தங்களது ஆய்வு அறிக்கையினை வெளியிட முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்திய அளவில், தமிழ்நாட்டு மாணவர்கள் உயர்கல்வி பெறுகின்ற நிலையினை சிதைப்பதற்கும், அவர்களுடைய வேலைவாய்ப்பு, தொழில் முனைதல் உள்ளிட்ட முன்னேற்றத்தை சிதைப்பதற்கும், ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசின் தமிழ்நாட்டின் ஏஜெண்டாக உள்ள ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் உள்நோக்கத்துடன் செய்கின்ற மாபெரும் மாணவர் விரோத சதி திட்ட செயலுக்கு மாணவர் சமுதாயமும், மக்களும் பெரும் கண்டன குரல் எழுப்புகின்றனர்.

மேலும், பல்கலைக்கழகங்களை சட்டப்பூர்வமாக அமைப்பது, நிர்வகிப்பது என்பது இந்திய அரசியலமைப்பு சட்டத்தின்படி, மாநில அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டதாகும். அதனடிப்படையில், ஒரு பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரை நியமிக்க மாநில அரசின் உயர்கல்வித் துறையால், தேடல் குழு (Search Committee) ஒன்று அமைக்கப்படும். அந்தக் குழுவில் ஆளுநரின் பிரதிநிதி ஒருவர், மாநில அரசின் பிரதிநிதி ஒருவர், பல்கலைக்கழக நிர்வாகத்தின் சார்பில் ஒருவர் (சிண்டிகேட்) என மூவர் இடம் பெறுவர். ஆளுநரின் பிரதிநிதி தேடல் குழுவின் தலைவராகச் செயல்படுவார். தேடல் குழு பரிந்துரை செய்யும் 3 நபர்களில் இருந்து ஒருவரைத் ஆளுநர் துணை வேந்தராக நியமிப்பார். இந்த நடைமுறையின்படிதான் ஒவ்வொரு பல்கலைக் கழகத்துக்கும் துணைவேந்தர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

ஆனால், 'இந்திய அரசியல் சாசனத்தின்படி நடப்பேன்' என்று உறுதிமொழி அளித்து பதவி ஏற்ற ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள், அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிராக பல்கலைக்கழக துணைவேந்தரை தேர்வு செய்யும் குழுவில், பல்கலைக் கழக மானியக்குழு தரப்பிலிருந்து ஒருவரை உறுப்பினராக நியமிக்க வேண்டுமென பரிந்துரை செய்துள்ளார். மாநில அரசின் உரிமைக்கும், பல்கலைக்கழகத்தின் சுயாட்சி தன்மைக்கும் எதிராக, ஒன்றிய அரசின் முழு ஆளுகைக்கு பல்கலைக்கழகங்களை கொண்டு செல்ல ஆளுநர் ஆர்.என்.ரவி (சிறப்புத் தலைவர், தமிழ்நாடு பா.ஜ.க.) அவர்கள் எடுத்திருக்கும் ஒரு பெரும் சதி திட்டமாகவே மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு இதை கருதுகிறது. இத்தகைய சட்டவிரோதமான ஒழுங்கீன போக்கினை வன்மையாக கண்டிக்கிறது. இதனால், கோவையிலுள்ள பாரதியார் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல்கலைக் கழகங்களில் துணை வேந்தர் நியமனம் செய்யப்படாமல், பல்கலைக்கழக நிர்வாகம் முடங்கி, செயலற்றுப் போகும் நிலையை தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி (சிறப்புத் தலைவர், தமிழ்நாடு பா.ஜ.க.) அவர்கள் உருவாக்கி உள்ளார்.

இவ்வாறு, பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்களை நியமிப்பதில் தேவையற்ற காலதாமதம் செய்வதும், அதில் ஒன்றிய அரசின் தலையீட்டை வலிந்து திணிப்பதும், அவ்வாறு துணைவேந்தர்களை நியமித்தாலும் அவர்கள் சனாதன சித்தாந்தத்தை உடையவர்களாக தேர்ந்தெடுத்து நியமிப்பது என தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி அவர்கள் செயல்படுவது, தமிழ்நாட்டின் கல்வி, சமூகநீதி, இருமொழிக் கொள்கை, மதச்சார்பற்ற தன்மை ஆகியவற்றின் மீது நடத்தப்படும் கொடுந்தாக்குதலாகும்.

இவற்றையெல்லாம் முன்பே உணர்ந்த, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கடந்த 25.04.2022 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், பல்கலைக் கழகத் துணை வேந்தர்களை மாநில அரசே நியமிக்கும் வகையில் சட்டமுன்வடிவுகளை நிறைவேற்றி ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பினார். ஆனால், அந்த மசோதாக்களுக்கு இதுநாள் வரையிலும் ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் வைத்திருக்கும் ஆளுநரின் தனது வன்மத்தை இக்கூட்டமைப்பு வன்மையாக கண்டிக்கிறது.

எனவே, தமிழ்நாட்டில் உயர்கல்வி பயின்ற கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களுக்கு பட்டப்படிப்பு சான்றிதழ் வழங்காமல் கடமைத் தவறிய தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி அவர்களை கண்டித்தும், உடனடியாக பட்டப்படிப்பு சான்றிதழை வழங்க வலியுறுத்தியும், ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசின் தேசிய கல்விக் கொள்கைக்கு விளம்பரத் தூதுவராகச் செயல்படுவதுடன், தமிழ்நாடு அரசின் அதிகாரத்திற்குட்பட்ட பல்கலைக்கழகங்களின் சுயாட்சி தன்மையை முடக்குகின்ற வகையில் அரசியல் சட்டவிதிகளுக்கு முரணாக, அத்துமீறி செயல்பட்டு வருவதன் மூலம் ஒழுங்கின்மை போக்கினை கடைப்பிடித்து வரும் தமிழ்நாடு பா.ஜ.க.வின் சிறப்புத் தலைவரைப் போல செயல்படும், ஆளுநர் ஆர்.என். ரவி அவர்களை கண்டித்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில், பல்கலைக் கழகத் துணைவேந்தர்களை மாநில அரசே நியமிக்கும் வகையில் நிறைவேற்றப்பட்ட சட்டமுன்வடிவுகளை உடனே ஒப்புதல் வழங்கிட வலியுறுத்தியும் வரும் 16.06.2023அன்று, காலை 9 மணியளவில் சென்னை, ஆளுநர் மாளிகைக்கு அருகிலுள்ள சின்ன மலை சாலை சந்திப்பில், தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பின் (FSO - TN) சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இந்த ஆர்ப்பாட்டத்தில், தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்ட மைப்பில் இடம்பெற்றுள்ள மாணவர் அமைப்புகளின் நிர்வாகிகள், பொறுப்பாளர்கள், தோழர்கள், முற்போக்கு சிந்தனையுடைய மாணவர், இளைஞர்கள் அனைவரும் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு (தமிழ்நாடு) ஒருங்கிணைப்பாளர் சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ., (செயலாளர், தி.மு.க. மாணவர் அணி.) நிரூபன் சக்கரவர்த்தி, மாநிலச் செயலாளர், (இந்திய மாணவர் சங்கம் (SFI) அணியினர்) தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

டி.ஆர்.பாலு எம்.பி. - இ.கருணாநிதி எம்.எல்.ஏ. - எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு! த.ஜெயக்குமார் தலைமை!

# பம்மல் வடக்கில் - கலைஞர் நூற்றாண்டு பட்டிமன்றம்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடங்கி வைக்கிறார்! எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. நிறைவு செய்கிறார்!

காஞ்சிபுரம், ஜூன் 13-

தாம்பரம் மாநகரம் - பம்மல் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்பு பட்டிமன்றம் இன்று (13.6.2023 - செவ்வாய்க்கிழமை) மாலை 5.30 மணியளவில் அனகாபுத்தூர் அம்மன் கோவில் திடலில் நடைபெறுகிறது.

விழாவிற்கு பகுதிச் செயலாளர் திருநீர்மலை த.ஜெயகுமார் தலைமை வகிக்கிறார்.

கே.சந்திரன், எஸ்.கே. நெப்போலியன், மு.ஸ்ரீதர், க.ஜெயசீலன், ஜி.பப்பிதா, ச.பிரபு, சி.பார்த்தசாரதி, இரா.குமரேசன், இரா. பாபுஜி, க.சுந்தரமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கோ.காமராஜ், இரா. நரேஷ்கண்ணா ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

"காலத்தை வென்ற கலைஞர் அவர்களின் நிலைத்த புகழுக்கு பெரிதும் காரணம் மொழி உணர்வா? கடமை உணர்வா?" எனும் தலைப்பில் நடைபெறும் பட்டிமன்றத்திற்கு நகைச்சுவை நாவலர் புலவர் மா.இராமலிங்கம் நடுவராகப் பொறுப்பேற்கிறார். 'மொழி உணர்வே' என முனைவர் இரா.மாது, முனைவர் அஞ்சலி ஆகியோரும், 'கடமை உணர்வே' என முனைவர் விஜயகுமார், கவிஞர் தாமரைக் கொடி ஆகியோரும் வாதிடுகின்றனர்.

இப்பட்டிமன்றத்தை மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடங்கி வைக்கிறார்.

பட்டிமன்றத்தை நிறைவு செய்து டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி. சிறப்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்வில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., இ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் புகழுரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்வில் க.வசந்தகுமாரி, வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, ஆதிமாறன், எஸ்.சேகர், ஜி.கே.விவேகானந்தன் (எ) ரவி, ஆ.நடராஜன், இரா. சுரேஷ், ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பெர்னார்ட், அ.தமிழ்மாறன், வ.விஜயரங்கன், பொன்.சதாசிவம், க.தேவேந்திரன், எஸ்.சதீஷ், ஆர்.எஸ்.சங்கர், மு.ரஞ்சன், பேராசிரியர் எல்.பிரபு, வி. ரவிச்சந்திரன், சி.கே.ஜெகதீஸ்வரன், பி.பிரசாத், மு. நித்தயானந்தம், இரா. பொன்ராம், ப.அன்பழகன், க.மோகன், மு.நி.தமிழ்குமரன், ப.ஆண்ட வன், இ. பாலாஜி, டி.எம்.ஜோசப், கலைவாணி பிரபு, வாணிஸ்ரீ விஜயகுமார், சித்ரா தமிழ்குமரன், சண்முகசுந்தரி ஜெயகுமார், சித்ராதேவி முரளிதரன், ந.மூவேந்தன், சௌ. ஆரோக்கியராஜ், எ.மாரிமுத்து, எஸ்.லாசர், க.பசுபதி, மலர் மு.கருணாநிதி, எம்.சக்தி, க.செல்வராஜ், அ. விநாயகமூர்த்தி, ஜெ.மஞ்சு, ஆர்.ராஜா, டி.புருஷோத்தமன், ஆர்.இளங்கோவன், மணல் எஸ்.செல்வம், பா. வனஜாதயா ளன், உஷாமாரிமுத்து, அனிதா இளங்கோவன், ஜனனி சுரேஷ்பாபு, ச.மனோகர் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

எ.செந்தில்குமார், ஆர். முரளிதரன், மு.தேவேந்திரன், ந.சோனை ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

# பிரதமராகும் தமிழரை அறிவிக்கத் தயாரா?

முதல்வர் பேட்டி! முதல் பக்கத் தொடர்ச்சி!

அதனால் அதற்கு விளக்கமாக இப்போது பதில் சொல்ல முடியாது. இருந்தாலும், தமிழரை பிரதமராக ஆக்கப் போகிறேன் என்று சொன்னது உள்ளபடியே மகிழ்ச்சியாக இருக்கிறது. மோடி மேல் என்ன கோபம் என்று தெரியவில்லை. 2024ல் பா.ஜ.க.வின் பிரதமர் வேட்பாளராக தமிழர் வரவேண்டும் என்ற எண்ணம் இருந்தால், தமிழிசை இருக்கிறார்கள், முருகன் இருக்கிறார், ஒருவேளை அவர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கலாம் என்று நான் நினைக்கிறேன்.

**மேகதாது அணையை முழுமுரமாக எதிர்ப்போம்!**

**செய்தியாளர்:** கர்நாடக அரசு மேதாது அணை கட்டுவதற்கு மும்முரமாக இருக்கிறார்கள், அதற்கு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

**மு.க.ஸ்டாலின்:** அதை எதிர்ப்பதில் நாங்களும் மும்முரமாக இருக்கிறோம்.

**செய்தியாளர்:** கடந்த 50 ஆண்டு காலமாக நிலுவையில் உள்ள சரபங்கா திட்டத்தை செயல்படுத்துவது குறித்து...

**மு.க.ஸ்டாலின்:** அது ஆய்வில் இருக்கிறது.

**செய்தியாளர்:** தமிழ்நாட்டிற்கு ஏராளமான திட்டங்களை பா.ஜ.க. அரசு கொடுத்திருப்பதாக அமித் ஷா அவர்கள் ஒரு பட்டியலை வெளியிட்டிருக்கிறார்...

**மு.க.ஸ்டாலின்:** நான் சேலத்தில் நடந்த செயல் வீரர்கள் கூட்டத்தில் தெளிவாக பேசியிருக்கிறேன். அதாவது, பா.ஜ.க. ஆட்சி இருந்தபோது, எந்த சிறப்புத் திட்டமும் இந்த ஒன்பது வருடங்களில் தமிழ்நாட்டிற்கு வரவில்லை. ஆனால் ஏற்கனவே காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் இருந்த தி.மு.க. அப்போது ஆட்சியில் இருந்த மன்மோகன் சிங் தலைமையில் இருந்த ஆட்சியில் என்னென்ன சிறப்புத் திட்டங்கள் வந்தது என்பதை பட்டியல் போட்டு நான் காண்பித்து இருக்கிறேன். அவர் அதைப் படிக்க வில்லையா? இல்லை அதைப் படித்து அதை யாரும் எடுத்துச் சொல்லவில்லையா? என்பதுதான் எனக்கு சந்தேகம். பா.ஜ.க.வினுடைய ஒன்பது ஆண்டுகால ஆட்சியில் என்ன செய்திருக்கிறது என்று கேள்வி கேட்டேன். அந்தக் கேள்விக்கு எந்த பதிலும் கிடையாது.

ஆனால், காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிக் காலத்தில், அன்றைக்கு தமிழ்நாட்டிற்குக் கிடைத்ததை சொல்ல வேண்டுமென்றால், சென்னைக்கு புதிதாக கிடைத்த மெட்ரோ ரயில், தமிழுக்கு செம்மொழி தகுதி, தமிழ் செம்மொழி உயராய்வு நிறுவனம், சேது சமுத்திர திட்டம், ஒரகடத்தில் தேசிய மோட்டார் வாகன சோதனை ஆராய்ச்சி மையம், தாம்பரத்தில் தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையம், சேலத்தில் புதிய ரயில்வே கோட்டம், சென்னை துறைமுகம் மதுரவாயல் பறக்கும் சாலை, நெம்மேலியில் கடல்நீரை குடிநீராக்கும் திட்டம், ஒகேனக்கல்லில் கூட்டுக் குடிநீர்த் திட்டம், சென்னைக்கு அருகில் கடல்சார் தேசிய பல்கலைக்கழகம், திருவாரூரில் மத்திய பல்கலைக்கழகம், கரூர், ஈரோடு, சேலம் ஆகிய மூன்று இடங்களில் சுமார் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உயர் தொழில்நுட்ப ஜவுளிப் பூங்கா. இவையெல்லாம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தான் வந்தது.

இதேபோல தமிழ்நாட்டிற்கு என்ன சிறப்புக்களை கொண்டு வந்திருக்கிறது என்பதுதான் என் கேள்வி. எனவே எந்தத் திட்டத்திற்கும் தொடர்ச்சியாக நிதி ஒதுக்கீடு செய்வதை நான் கேட்கவில்லை. அனைத்து மாநிலத்திற்கும் செய்யப்படும் பொதுவான இடத்தில் தமிழ்நாடு இணைக்கப்பட்டிருப்பதைப் பற்றி நான் கேட்கவில்லை. இன்றைக்கு ஜி.எஸ்.டி.யில் ஒவ்வொரு மாநிலமும் ஒன்றிய அரசிற்கு நிதி கொடுத்துக் கொண்டிருக்கிறது. அந்த ஜி.எஸ்.டி.யில் தமிழ்நாட்டிலிருந்து அதிகமாகக் கொடுத்திருக்கிறோம். ஆனால் தமிழ்நாட்டிற்குத் தான் இன்றைக்கு ஒன்றிய அரசு நிதி கொடுப்பதில் மிகவும் குறைவாக கொடுத்துக் கொண்டிருக்கிறது, மற்ற மாநிலங்களுக்கெல்லாம் அதிகமாக கொடுத்துக் கொண்டிருக்கிறது. அதைத்தான் அடிப்படையாக வைத்துக் கேட்டேன்.

**எய்ம்ஸ் மருத்துவமனை கட்டடம் என்ன ஆயிற்று?**

அதேபோல, மதுரையில் 1200 கோடி ரூபாய் மதிப்பில் எய்ம்ஸ் மருத்துவமனைக்கு பி.ஜே.பி. ஆட்சிக்கு வந்தவுடன் அன்றைக்கு நிதி அமைச்சராக இருந்த அருண் ஜெட்லி அவர்கள் பாராளுமன்றத்தில் அதற்கு உறுதி கொடுத்தார், அறிவித்தார்கள். அது என்ன ஆகியது? பிரதமர் வந்து அடிக்கல் நாட்டினார். அதற்குப் பின் பலமுறை அமித் ஷா அவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்திருக்கிறார்கள். வந்தபோது, பணி 50 சதவீதம் முடிந்து விட்டது, 75 சதவீதம் முடிந்துவிட்டது என்று சொல்லிவிட்டுச் சென்றாரே தவிர இதுவரைக்கும் எந்தப் பணியும் நடைபெறவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. அதையெல்லாம் மூடி மறைத்து அவர் பேசிவிட்டுச் சென்றிருக்கிறாரே தவிர, நான் கேட்ட கேள்விக்கு எதற்கும் பதில் தரவில்லை.

**செய்தியாளர்:** டாஸ்மாக்கில் பத்து ரூபாய் ஊழல் புகார் குறித்து...

**மு.க.ஸ்டாலின்:** அதெல்லாம் திட்ட மிட்டு செய்யக்கூடிய பிரச்சாரங்கள்.

**செய்தியாளர்:** எய்ம்ஸ் மருத்துவ மனை கொண்டுவராததற்கு தி.மு.க. தான் பதில் சொல்ல வேண்டும் என்று அமித் ஷா சொல்லியிருக்கிறாரே?

**மு.க.ஸ்டாலின்:** தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது, எய்ம்ஸ் என்று ஒரு மருத்துவமனை தேவையே படவில்லை. ஏனென்றால் நம்முடைய மருத்துவக் கட்டமைப்புகள் அதிக அளவில் சிறப்பாக செய்து கொண்டிருக்கிறது. இருந்தாலும், இதை அறிவித்தது யார்? தி.மு.க.வா அறிவித்தது, அறிவித்தது ஒன்றிய அரசு. அவர்கள் தான் இதைச் செய்ய வேண்டும். இந்தக் கேள்வியைக் அவர் கேட்பதே ஒரு பொறுப்புள்ள உள்துறை அமைச்சருக்கு அழகல்ல.

**செய்தியாளர்:** தி.மு.க., காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் ஊழல் பெரிய அளவில் நடந்தது என்று சொல்கிறார்கள்...

**இந்தியாவே தலைகுனிந்து நிற்கிறது!**

**மு.க.ஸ்டாலின்:** ரஃபேல் ஊழல், அதானி ஊழல். இன்றைக்கு இந்தியாவே தலைகுனிந்து நிற்கிறது. முதலில் அதற்கு பதில் சொல்லட்டும், அதற்குப் பின் இதைப் பேசுவோம்.

**செய்தியாளர்:** அத்திக்கடவு - அவினாசி திட்டம் எந்த அளவுக்கு இருக்கிறது?

**மு.க.ஸ்டாலின்:** முடியக்கூடிய நிலையில் இருக்கிறது, விரைவில் திறக்கப்படும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டி அளித்தார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## பேரூர் ஆ. நடராஜன்

ஜூன் 13 (2017)



**இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டதோடு, தொழிலாளர்களுக்காக குரல் கொடுத்தவர்.**

**கழகத்தின் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை துவக்க காலத்திலேயே, அதில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**கழக தொழிலாளர் அணிச் செயலாளராகவும் – தொ.மு.ச. பேரவைத் தலைவராகவும், தமிழ் மாநிலக்குழுத் தலைவராகவும் பொறுப்பு வகித்து பணியாற்றியவர்.**

**1977, 1984, 1989, 1996 ஆகிய நான்கு முறை பேரூர் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**"தொழிலாளர் நலனுக்காகவே தினசரி சிந்தித்து வாழ்ந்து வந்த ஒரு மாபெரும் தூணை இழந்து நிற்கிறது கழகம்" என கழக செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.**

தலைமைக் கழகம்

தி.மு.க.